Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 26, 2024

வியாழக்கிழமை,26 நவம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 123 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தவும்



சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று இடம்பெற்று இன்றுடன் (டிசெம்பர் 26) ஆம் திகதியுடன் 20வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் நினைவு தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

### அஸ்வெசும கொடுப்பனவு

# ஜனவரி முதல் அதிகரிப்பு

**ரணிலின் வர்த்தமானி இரத்து**
**வறிய குடும்பத்துக்கு ரூ.10,000**
**மிகவும் ஏழ்மையான குடும்பத்துக்கு ரூ.17,500**
**நிலையற்ற குடும்பத்துக்கு ரூ.5,000**
**ஆபத்துக்குட்பட்ட குடும்பத்துக்கு ரூ.5,000**
**மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.7,500**
**சிறுநீரக நோயாளர்களுக்கு ரூ.7,500**
**முதியோர்களுக்கு ரூ.3,000**

Welfare Benefits Board
WBB Sri Lanka
தேவை நாடுவோருக்கான சேவை
INDEED FOR IN NEED

அஸ்வெசும கொடுப்பனவு தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட வர்த்தமானியை இரத்து செய்து, புதிய வர்த்தமானியை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வெளியிட்டுள்ளார்.

நிதி, கொள்வனவு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் புதிய விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் 17.05.2024 அன்று வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலும், இம்மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த புதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் தகுதியான குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு மாதாந்தப் பலன்களை வழங்குவதற்கான திட்டத்தை 2024 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படுகின்றது.

முன்னைய வர்த்தமானி அறிவித்தலின்படி, வறிய குடும்பத்திற்கான 8,500 ரூபாய் கொடுப்பனவும், 10,000 ரூபாவாகவும், மிகவும் ஏழ்மையான குடும்பத்திற்கான 15,000 ரூபாய் கொடுப்பனவு 17,500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரிவினருக்கான கொடுப்பனவுகளின் தொகைகளில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

புதிய வர்த்தமானி அறிவிப்பின்படி, 2025 ஜனவரி முதல் மார்ச் வரை 480,000 நிலையற்ற குடும்பங்களுக்கு ரூ.5,000 வழங்கப்படும். ஆபத்துக்குட்பட்ட 480,000 குடும்பங்களுக்கு 2025 ஜனவரி முதல் 2025 டிசெம்பர் வரை 5,000 ரூபாய் வழங்கப்படும்.

தொடர்ச்சி P2

## வாடிக்கையாளரை தாக்கிய மூவர் கைது

கெக்கிராவ நகரிலுள்ள ஹோட்டலுக்குச் சென்றிருந்த வாடிக்கையாளர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் ஹோட்டல் முகாமையாளர் உட்பட மூவரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெக்கிராவ மஹா வீதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் செவ்வாய்க்கிழமை (24) மாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கழுத்தை ஊடறுத்த கூரிய தடி

*க.அகரன்*

கூரிய தடி ஒன்று கழுத்தில் குத்தி கழுத்தை ஊடறுத்து உயிருக்கு ஆபத்தான நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதியவர், செவ்வாய்க்கிழமை (25) அன்று வைத்தியர்களால் மேற்கொண்ட சத்திர சிகிச்சையினால் கூரிய தடி அகற்றப்பட்டதுடன், அவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### மஹிந்தவின் பாதுகாப்பு நீக்கம்:

## நீதிமன்றத்தை நாடுவதாக அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி ரவீந்திர ஜயசிங்க புதன்கிழமை (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கிறிஸ்மஸ் அன்னதானம்



கிறிஸ்மஸ் தினமான புதன்கிழமை (25) கொச்சிக்கடையில் உள்ள ஹோலி ஸ்பிரிட் தேவாலயத்தில் நடைபெற்ற அன்னதான நிகழ்வில் கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் கலந்து கொண்டார்.

நிஷால் பதுகே

## துவி தசாப்த சுனாமி தினம்

*வி.ரி.சகாதேவராஜா*

இந்து சமுத்திரத்தை உலுக்கிய ஆழிப்பேரலைக்கு வியாழக்கிழமையுடன் (26) இரு தசாப்த காலமாகிறது. அதனையொட்டி நாடெங்கிலும் துவி தசாப்த சுனாமி தின வைபவங்கள் நடத்துவதற்குப் பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமியில் காரைதீவில் உயிர் நீத்த சுமார் 867 பேரை நினைவு கூர்ந்து காரைதீவு கடற்கரையில் நிமைன்டர் விளையாட்டு கழகத்தினரால் நிறுவப்பட்ட நினைவுத் தூபி முன்றலில் பொதுவான வைபவம் வருடாவருடம் நடைபெறுவது வழக்கம்.



தொடர்ச்சி P2

## 8,747 சாரதிகள் கைது



நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் எப்பாகத்திலும் பாரிய விபத்துக்கள் இடம்பெறவில்லை என தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திணைக்களம், மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகள் உட்பட, வீதி சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 8,747 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### கஜகஸ்தானில் பயங்கரம்

## வேகமாக உயரமிழந்து மோதி தீப்பிழம்புகளுடன் விழுந்தது

### 72 பேரில் 12 பேர் உயிர் பிழைத்ததாக தகவல்



கஜகஸ்தானின் அக்டாவ் விமான நிலையத்தில் 72 பயணிகளுடன் அவசரமாகத் தரையிறங்க முயன்ற அஜர்பைஜான் எயார்லைன்ஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த விபத்தில் 12 பேர் உயிர் பிழைத்திருப்பதாகவும் கூறியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 4 சம்பவங்கள்; ஐவர் கைது



துப்பாக்கிச் சூடு, பெண்ணொருவருக்கு விஷ ஊசி ஏற்றி கொன்றமை, கைலப்பில் ஒருவரைப் படுகொலைச் செய்தமை மற்றும் பெண் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்தது ஆகிய நான்கு சம்பவங்கள் தொடர்பில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# 'பீஸ் ஆர்க்' கப்பலில் 27 வரை மருத்துவ சேவை

சீன மக்கள் குடியரசின் இராணுவ கடற்படையின் மருத்துவமனைக் கப்பலான 'பீஸ் ஆர்க்' (Peace Ark) இலங்கைக்கு சம்பிரதாயபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இலங்கைக்கு கடந்த 21ஆம் திகதி வருகை தந்திருந்த குறித்த கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இலங்கையில் தரித்து நிற்கும் அதேவேளை, இலங்கையர்களுக்கு மருத்துவ சேவையையும் வழங்கி வருகிறது.

முற்று முழுதாக மருத்துவ சேவையை மாத்திரம் உள்ளடக்கியிருக்கும் இந்த கப்பல், கடந்த 22ஆம் திகதி முதல் இலங்கை மக்களுக்கு இலங்கையில் உள்ள சீன தூதரகத்துடன் இணைந்து மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் கிளினிக்குகளை கப்பலில் நடத்திவருகிறது. இச்சேவை எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

178 மீற்றர் நீளமுள்ள 'பீஸ் ஆர்க்' மருத்துவமனைக் கப்பலில் கப்டன் டெங் கியாங்கின் தலைமையில் 310 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு, குறித்த கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்படவிருக்கிறது.

'பீஸ் ஆர்க்' கப்பல் இலங்கைக்கு விஜயம் செய்வது இது இரண்டாவது தடவையாகும்.இதற்கு முன்னர் 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



PAGE 1 தொடர்ச்சிகள்

அஸ்வெசும கொடுப்பனவு

# ஜனவரி முதல் அதிகரிப்பு

960,000 வறிய குடும்பங்களுக்கு 2025 ஜனவரி முதல், 2026 ஜூன் வரை 10,000 ரூபாய் வழங்கப்படும். 480,000 மிக வறிய குடும்பங்களுக்கு 2025 ஜனவரி முதல் 2025 டிசெம்பர் வரையிலும் 17,500 ரூபாய் வழங்கப்படும்

மாற்றுத்திறனாளிகளுக்கு 7,500 ரூபாய் வழங்கப்படும். அந்த தொகையை எதிர்பார்த்திருக்கும் நபர்களின் எண்ணிக்கை 410,000 ஆகும். சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500 ரூபாய் வழங்கப்படும் அந்த தொகையை 50,000 பேர் எதிர்பார்த்திருக்கின்றனர். முதியோர்களுக்கு 3,000 ரூபாயும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 820,000 முதியோர்கள் இந்த தொகையை எதிர்பார்த்திருக்கின்றனர்.

இந்த புதிய முறைகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என புதிய வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டுள்ளது.



# 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தவும்

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இன்று (26) காலை 9.25 லிருந்து 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ம் திகதி காலையில் சுனாமி நாட்டை தாக்கியது. இதில் சுமார் 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். சுனாமி ஏற்பட்டதன் பின்னர் 2005ம் ஆண்டில் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன்படி, அனர்த்தங்களை முன்கூட்டியே அறிவித்தல், அனர்த்தங்களின் போது பாதிப்புக்களைக் குறைப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.


## துவி தசாப்த சுனாமி தினம்



குறித்த நிகழ்வு இம்முறையும் வியாழக்கிழமை (26) காலை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கு ஆத்மார்த்த சுனாமி ஒளிதீபம் ஏற்றுவதோடு, அஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இடம்பெறும் என்று சங்க செயலாளர் கு.ஜெயராஜி தெரிவித்துள்ளார்.

## 4 சம்பவங்கள்; ஐவர் கைது



SH துப்பாக்கிச் சூட்டில் கணவன் பலி; மனைவி படுகாயம்

வெல்லவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மரலுவாவ பிரதேசத்தில் வீடொன்றில் இருந்த தம்பதியினர் மீது இனந்தெரியாத நபர்கள் செவ்வாய்க்கிழமை (24) இரவு வேளையில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், கணவன் (வயது 32) உயிரிழந்துள்ளார். அவருடைய மனைவி (வயது 30) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர், குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். மனைவி தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் மற்றும் சந்தேக நபர்கள் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் வெளியாகவில்லை என தெரிவித்துள்ள வெல்லவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

SH மனித படுகொலைக்கு முயற்சி; தம்பதி கைது

மருதானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாளிகாகந்த நீதிமன்றத்துக்கு அருகில் டிசெம்பர் 14ஆம் திகதியன்று பெண் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு மனித படுகொலைக்கு முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில், கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் துப்பாக்கியுடன் மறைந்திருந்த வீட்டின் உரிமையாளர் மற்றும் அவருடைய மனைவி, துப்பாக்கியை அப்புறப்படுத்தியுள்ளனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவ்விருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அந்த துப்பாக்கி ஓட்டோ சாரதி ஒருவரிடம் கையளிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, ஜம்பட்டா வீதியில் வைத்து செவ்வாய்க்கிழமை (24) ஓட்டோ சாரதி, கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஓட்டோ சாரதியான 34 வயதான நபரிடம் மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

SH மனித படுகொலை; இருவர் கைது

மாதம்பை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெமடபிட்டிய பிரதேசத்தில், இரண்டு நபர்களுக்கு இடையில் டிசெம்பர் 22ஆம் திகதியன்று வாய்த்தர்க்கம் முற்றிப்போய் கைகலப்பாக மாறியதை அடுத்து, மனக்குலம் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான நபர் மரணித்த சம்பவம் தொடர்பில், மாதம்பே பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்

அந்த விசாரணையின் பின்னர், 28 மற்றும் 53 வயதான நபர்கள் செவ்வாய்க்கிழமை (24) கைது செய்யப்பட்டனர்.

SH மனித படுகொலை; ஒருவர் கைது

திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வத்தேகம பிரதேசத்தில் இனந்தெரியாத ஊசியைச் செலுத்தி 69 வயதான பெண் கொலை செய்யப்பட்டுள்ளார். அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், செவ்வாய்க்கிழமை (24) அன்று 42 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணி பிரச்சினை காரணமாக இவர் இந்த படுகொலையைச் செய்துள்ளதாக விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது என திக்வெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வேகமாக உயரமிழந்து மோதி தீப்பிழம்புகளுடன் விழுந்தது

ரஷ்ய செய்தி நிறுவனத்தின் கூற்றுப்படி, விபத்துக்குள்ளான அஜர்பைஜான் விமானம் ஜெ2-8243 பாகுவில் இருந்து ரஷ்யாவின் க்ரோஸ்னிக்கு சென்று கொண்டிருந்தது. க்ரோஸ்னியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக விமானம் திருப்பி விடப்பட்டுள்ளது. அந்த விமானம் கஜகஸ்தானின் அகடாவ் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்கிய போது விபத்துக்குள்ளானது.

விமானம் விபத்துக்குள்ளான போது, அதில், ஐந்து விமான சிப்பந்திகளுடன் 67 பயணிகள் இருந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் 40க்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என்று கஜகஸ்தான் அவசர அமைச்சகம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

விபத்து குறித்து வெளியான வீடியோவில் விமானம் விபத்துக்குள்ளானபோது, வேகமாக உயரமிழந்து மோதி தீப்பிழம்புகளுடன் விபத்துக்குள்ளாவது பதிவாகியுள்ளது. அதிக புகை மூட்டம் காரணமாக விமானம் விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது. விமானம் திறந்த வெளியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து நடந்த இடத்தில் அவசர சேவைகள் பிரிவு தீயை அணைத்துள்ளது. விபத்தில் உயிர் பிழைத்தவர்கள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாக கஜகஸ்தான் அவசரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அஜர்பைஜான் எயார்லைன்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், “அஜர்பைஜான் எயார்லைன்ஸால் இயக்கப்படும் எம்பரர் 190 விமானம், பாகு - க்ரோனி வழித்தடத்தில் அக்டாவ் நகருக்கு அருகே மூன்று கிலோ மீட்டருக்கு முன்பு அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பான கூடுதல் தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கோளாறு போன்ற எந்த காரணத்தால் விமானம் விபத்துக்குள்ளானது என்று பல்வேறு கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அசர்பைஜானின் பாகுவில் இருந்து 72 பயணிகளுடன் ட்ரோஸ்னி நோக்கி பயணிகள் விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது.

அடர்ந்த மூடுபனி காரணமாக திருப்பி விடப்பட்ட இந்த விமானம் கஜகஸ்தானின் அக்டாவ் பகுதியில் உள்ள விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றுள்ளது.

அப்போது விமானம் திடீரென கீழே விழுந்தது. இதில் விமானம் வெடித்து சிதறி தீப்பற்றி எரியும் காட்சிகள் வெளியாகியுள்ளது. இதில் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படும் நிலையில் சிலர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பயணிகள் விமானம் விபத்தில் சிக்குவதற்கு முன்பு விமான நிலையம் அருகே பலமுறை வானில் வட்டமடித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. சம்பவ இடத்தில் தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த விபத்துக்கான காரணம் மற்றும் உயிரிழப்பு குறித்த எந்த தகவலும் தற்போது வரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## வாடிக்கையாளரை தாக்கிய மூவர் கைது

உணவகத்திற்கு வந்த வாடிக்கையாளருக்கும் ஹோட்டல் முகாமையாளருக்கும் இடையில் நீண்ட நேரம் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து ஹோட்டல் முகாமையாளர் உட்பட மூன்று ஊழியர்கள் குறித்த வாடிக்கையாளரைத் தாக்கி காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலில் காயமடைந்த நபர் கெக்கிராவ பொலிஸ் அதிகாரிகளால் உடனடியாக தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கெக்கிராவ- திப்பட்டுவெவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இந்த தாக்குதலில் காயமடைந்துள்ளார்.

## கழுத்தை ஊடறுத்த கூரிய தடி

முதியவர், உரிய நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், விரைவாக முன்னெடுக்கப்பட்ட சத்திர சிகிச்சை மூலம் அவரது கழுத்தில் இருந்து தடி அகற்றப்பட்டதுடன் அவர் உயிருக்கு ஆபத்தின்றி காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்த வெற்றிகரமான சத்திர சிகிச்சை உணர்வழியியல் மருத்துவ நிபுணர் நாகேஸ்வரன் தலைமையிலான மயக்க மருந்து (Anesthesia) அணியினருடன் இணைந்து சத்திர சிகிச்சை நிபுணர் ரஜீவ் நிர்மலசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றத்தை நாடுவதாக அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை நீக்கினால் அது அவசியம் என்று திருப்தியடைய முடியும் எனவும் பொருளாதார காரணங்களுக்காக முப்படையினரையும் நீக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி நிலாந்தி கோட்டஹச்சி, சட்டத்தரணி என்ற வகையில் கூறியுள்ள கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்த ரவீந்திர ஜயசிங்க, உகண்டா அறிக்கை போன்று இதுவும் மக்களை தவறாக வழிநடத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

## 8,747 சாரதிகள் கைது

இவர்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகளும், கவனக்குறைவு மற்றும் அபாயகரமாக வாகனங்களைச் செலுத்திய 81 சாரதிகளும், அதிவேகமாக வாகனங்களைச் செலுத்திய 128 சாரதிகளும், வீதிச் சட்டத் திட்டங்களை மீறிய குற்றச்சாட்டுகளின் கீழ், 1,368 சாரதிகளும், சாரதி அனுமதிப்பத்திரங்களில் இருந்த தவறுகள் காரணமாக 615 சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மதுபோதையில் வாகனத்தை செலுத்தாமல், வீதிச் சட்டத் திட்டங்களை முறையாக கடைப்பிடிக்குமாறும் பொலிஸ் திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மார்கழி பெருவிழா...

■ புகஜிந்தன்


தென்னாட்டு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோவில் மற்றும் தென்னாட்டு அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோவில் மாணவர் சபையின் ஏற்பாட்டில், மார்கழி பெருவிழாவில் ஆன்மீக சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் மார்கழித்திங்கள் 10 நாள் நிகழ்வு புதன்கிழமை (25) யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது திருமுறைகள், நகர் ஊர்வலம் வந்ததுடன், குறித்த நகர் ஊர்வமானது வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரா தேவஸ்தான முன்றலில் இருந்து ஆரம்பமாகி அங்கிருந்து கே.கே.எஸ் வீதி, யாழ் வைத்தியசாலை வீதி, மணிக்கூட்டு கோபுர வீதியூடாக வந்து யாழ். இந்திய மத்திய கலாசார மத்திய நிலையம் வரை சென்று நிறைவு பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டதுடன் மேலும் வடமாகாண பிரதம செயலாளர் ஏல்.இளங்கோவன், தஞ்சாவூர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ச.நல்லசிவம், செந்தமிழ் சொல் வித்தகர் பழனி குமாரலிங்கம், கொழும்பு பல்கலைக்கழக தமிழ் துறை பேராசிரியர் த.பிரசாந்தன், தவத்திரு வேலன் சுவாமிகள், ஆன்மீகத்தினர்கள் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.













### கடந்த காலங்களில்

# “முறையற்ற இடமாற்றங்கள்”

■ எஸ்.தில்லைநாதன்

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் வளப் பங்கீடு சரியான முறையில் நடைபெறவில்லை என சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல அதிகாரிகளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கலந்துரையாடல் நடத்தி இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை மாலை (24) இடம்பெற்றுள்ளது.



இதன்போது, வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற இடமாற்றங்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இடமாற்றங்கள் பெயரளவுக்கே இடம்பெற்றன என்பதை சுட்டிக்காட்டிய அவர்கள் ஆசிரிய ஆலோசகர்களுக்கான இடமாற்றங்கள் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் முன் பள்ளிக் கல்வி தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என கோரியதுடன், ஆசிரியர்களுக்கு தற்போதைய காலத்திற்கு ஏற்ற வகையில், பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

மேலும், இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் கோரிக்கை கடிதமும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## “தகவல் தருபர்களின் இரகசியம் பாதுகாக்கப்படும்”

■ பாறுக் ஷிஹான்

திருட்டு சம்பவங்கள் பலவற்றுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபரை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் சம்மாந்துறை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த திருட்டு சம்பங்கள் தொடர்பில் புலன்



விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு பிரதான சந்தேக நபரை இனங்கண்டிருந்தனர்.

அத்துடன், பல்வேறு திருட்டு சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குறித்த சந்தேக நபர் பற்றிய தகவல் தெரிந்தால் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்குமாறும் குறித்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், சம்மாந்துறை பொலிஸ் நிலையம் 0672 260 222 எண்ணைத் தொடர்பு கொண்டு குறித்த சந்தேக நபர் பற்றிய தகவலை அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர்.

# மீளாய்வு கூட்டம்

■ நூருல் ஹுதா உமர்

எலி காய்ச்சல் மற்றும் டெங்கு பரவல் தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றுள்ளது.

பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டுள்ளனர்.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பூச்சியியல் ஆய்வுக் குழுவின் பொறுப்பாளர் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட் தயாரித்த வருடாந்த பூச்சியியல் ஆய்வறிக்கை இந்த மீளாய்வு கூட்டத்தின் போது வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரதிகளைப் பிராந்திய பணிப்பாளர், தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்பு



வைத்திய அதிகாரி ஆகியோருக்கு பூச்சியியல் உத்தியோகத்தர் ஹமீட் வழங்கி வைத்துள்ளார்.

## “தீயால் பாதிக்கப்பட்டோருக்கு காணிகள் வழங்க ஏற்பாடு”

■ எஸ்.கணேசன்

கபரகல தோட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 20 குடும்பங்கள் தொடர்பாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அவரின் பணிப்புரையின் பேரில், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் கபரகல தோட்டத்திற்கு விஜயம் செய்து, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி, அவர்களுடைய பாதிப்புகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்ததுடன், சுமார் 60,000 ரூபாய் பெறுமதியான நிவாரண பொருட்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனி வீடுகளை அமைப்பதற்கான காணிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

இவர்களுக்கு காணிகளை வழங்க வேண்டும் என இந்த பேச்சுவார்த்தையில் தோட்ட நிர்வாகம் தெரிவித்ததுடன், அதனை நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அவர்களுக்கு மிக விரைவில் காணிகளை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதாகத் தோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராதாகிருஷ்ணன் எம்.பி. விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையின் மூலம் மேலும் தெரிவித்துள்ளதாவது,



இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் காணிகளை வழங்குவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு அவர்களுக்குக் காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், குறித்த தோட்டத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மிக விரைவில் அவர்களுக்கான காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் நல்லாட்சி கால அரசாங்கத்தில் வீடுகள் கட்டப்பட்டதை போல புதிய அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும், இந்த நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும் எனவும் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கைதிகளுக்கு பொது மன்னிப்பு




நத்தார் பண்டிகையான புதன்கிழமை(25) நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் இருந்த சுமார் 389 சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறிய குற்றங்களுக்காகவும், வேறு காரணங்களுக்காகவும் தண்டனை பெற்றவர்களுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்படுகின்ற பொது மன்னிப்பின் அடிப்படையிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், மட்டக்களப்பு சிறையிலிருந்து 12 சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு, மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

அத்துடன், வவுனியா சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு, வவுனியா சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி புத்திக பெரெரா தலைமையில் நடைபெற்றுள்ளது.

# வீதி அபிவிருத்தி பணிகளை ஆராய்ந்தார் பிரபு எம்.பி.



■ ஏ.எச்.ஹஸ்பர்

காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, காத்தான்குடி தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரான பிர்தௌஸ் நளீமியின் அழைப்பின் பேரில் செவ்வாய்க்கிழமை (24) காத்தான்குடிக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது, காத்தான்குடி நகர சபையின் செயலாளர் றிப்கா சபீனை சந்தித்து பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதி அபிவிருத்திப் பணிகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

உலக வங்கியின் நிதி உதவியோடு கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வீதி அபிவிருத்திகள் தொடர்பாகவும், அது தொடர்பில் அப்பிரதேச மக்கள் முன்வைத்துள்ள ‘வீதியானது இருபக்க வடிகான்களைக் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்’ என்ற கோரிக்கை தொடர்பிலும் இக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல் (அல் அக்ஸா பள்ளிவாசல்) வீதி மற்றும் புதிய காத்தான்குடி பெண்கள் சந்தை வீதி ஆகிய வீதிகளைப் பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டதுடன் பிரதேச மக்களுடனும் கலந்துரையாடினார். அண்மையில் இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு அவர்களை நேரில் சந்தித்து இந்த வீதி அபிவிருத்தி பணி தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர், இந்த விடயங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபை, உலக வங்கி பிரதிநிதிகள் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வரவுள்ளதாகவும் மக்களின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு, தரமான முறையில் இந்த வீதியினை அபிவிருத்தி செய்வதை தாம் உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஊழிக்கூத்தில் உயிர் நீத்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்

டிசெம்பர் 26ஆம் திகதி என்றாலே பலருக்கும் ஞாபகத்தில் இருப்பது 'சுனாமி பேரலை' இன்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் இதேநாளில், பேரழிவுகளுக்கு முகங்கொடுத்தவர்களும் அக்காட்சிகளை ஊடகங்களின் வாயிலாகக் கண்டவர்களும் இன்னுமொரு நாள், இனியும் வரவேகூடாதென நினைத்திருப்பர். அவ்வாறு, கடலலை குடியேற்றப் பகுதிகளுக்குப் புகுந்து கோரத்தாண்டவம் ஆடிய நாளாகும். இந்த நாளில் மனிதாபிமானமற்ற சம்பவங்கள் பல இடம்பெற்றன. அதிலொன்றை இன்னுமே பலரும் மறந்திருக்க மாட்டார்கள். காலியில் ஆழிப் பேரலையில் சிக்கிக்கொண்ட பெண்ணொருவரின், கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை அபகரிப்பதற்காக அப்பெண்ணை இளைஞர்கள் இருவர், அங்கும் இங்கும் தூக்கிச் சென்ற காட்சி இன்றுமே கண்களுக்குள் நிழலாடுகிறது.

ஆழிப்பேரலைக்கு அடுத்தடுத்த நாள்களில், ஊடகங்களில் அந்த பேரலையின் கோரத் தாண்டவமே செய்திகளாக இருந்தன. நமது நாட்டை மட்டுமன்றி, இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ், மாலைதீவு, மலேசியா, மியன்மார், மடகஸ்கார், சோமாலியா, கென்யா, ஜேர்மன், தன்சானியா ஆகிய நாடுகள் உள்ளடங்கலாக 14 நாடுகள் பாதிக்கப்பட்டன.

இதன்போது சுனாமி அலைகள் 15-30 மீட்டர் வரை உயரம் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் இந்தோனேசியாவில் 122,232 பேரும் , இலங்கையில் 30974பேரும், இந்தியாவில் 10,776 பேரும், தாய்லாந்தில் 5,395 பேரும், சோமாலியாவில் 150 பேரும், மாலைதீவில் 82 பேரும், மலேசியாவில் 68 பேரும், மியன்மாரில் 59 பேரும் உள்ளடங்கலாக ஒட்டுமொத்தமாக 167,520 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

2004 டிசெம்பர் 26ஆம் திகதியை யாரும் எளிதில் மறந்து விட முடியாது. 14 நாடுகளில் மக்களின் குடியேற்றப் பகுதிகளை ஆக்கிரமித்த இராட்சத அலைகள் 250,000இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பறித்துச் சென்றன. அதற்கு முந்தைய நாட்களில், மிக அமைதியாகவே கடலலை படுத்திருந்தது.

எனினும், இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவிற்கு அண்மித்த கடற்பரப்பை ஆழிப்பேரலை இலங்கை நேரப்படி காலை 6.58 அளவில் ஆக்கிரமிக்கத் தொடங்கியது. காலை 7.28 அளவில் ஆழிப்பேரலை ஊழிக்கூத்தாடியது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு உட்பட வடக்கு, கிழக்கு கரையோர பிரதேசங்கள் மற்றும் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை உள்ளிட்ட தென் கரையோர பிரதேசங்களை ஆழிப்பேரலை ஆட்கொண்டது. இலங்கையில் சுமார் 35,000 உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

இந்நிலையில், 2004இல் நாட்டில் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கு இன்றும் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்படுகின்றது. இன்று (26) காலை 09.25 தொடக்கம் 09.27 வரை இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்படுகின்றது. தேசிய வைபவமும் நடத்தப்படுகின்றது.

டிசெம்பர் 26ஆம் திகதி தேசியப் பாதுகாப்பு தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டே இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த மௌன அஞ்சலி நிகழ்வில், வேறுபாடுகளைக் களைந்து, இலங்கையர் என்றவகையில், ஆழிப்பேரலையில் எம்மைவிட்டுப் பிரிந்து உறவுகளுக்காக, இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தி, அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## அனுர அரசும் வரலாற்றின்

# குப்பைத் தொட்டிக்குள்ளேயே வீசப்படும்

முருகானந்தம் தவம்

இலங்கை பாராளுமன்றம் தொடர்பிலோ அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்கள் தொடர்பிலோ மக்களுக்கு எப்போதுமே நல்லபிப்பிராயம் இருந்ததில்லை. தாம் தெரிவு செய்யும் தமது மாவட்ட பிரதிநிதிகள் கூட முதலில் 'அம்பி'யாக இருந்து விட்டு சில நாட்களின் பின்னர் 'அந்நியன்' ஆக மாறுவதனை மக்கள் நன்கு அறிந்தவர்கள். அதனால் தான் 'கோத்தா கோ கோம்' மக்கள் கிளர்ச்சியின் போது, பாராளுமன்றத்திலுள்ள 225 எம்.பிக்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற கோஷம் வலுப் பெற்றிருந்ததுடன், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும் புது முகங்களையே பெருமளவில் தெரிவு செய்ததுடன், பழையவர்களில் சிலரை வடிகட்டியே பாராளுமன்றத்திற்கு அனுப்பினர். மக்கள் விரும்பியதைப்போலவே நாட்டில் ஆட்சி மாறியதால் பாராளுமன்றத்தில் இதுவரை காணக்கிடைத்த காட்சிகளான இனவாதம் பேசுதல், சேறடித்தல், அரச தரப்பு என்ற ரீதியில் எதிர்க்கட்சிகளை அடக்கியாளுதல், பாரபட்சம் காட்டுதல், சபாபீடத்தை தவறாக வழிநடத்துதல், அவமரியாதை செய்தல், பொய் தகவல்களை வழங்குதல், பொய் குற்றச்சாட்டு சுமத்துதல் போன்றவை மாறும் என மக்கள் முழுவதுமாக நம்பினர். பாராளுமன்றத்தைத் தூய்மைப்படுத்தி விட்டோம் என பெருமிதப்பட்டனர். ஆனால், காட்சிகள் மாறினாலும் கதை, திரைக்கதை, வசனம் மாறவில்லை என்பதனை கடந்த பாராளுமன்ற அமர்வுகளில் அனுர அரசு நிரூபித்து வருகின்றது.

கலாநிதிகள், கல்விமான்கள் நிறைந்த அரசு, நாட்டில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு புதிய திசையைக் காட்டப்போகும் அரசு, பாராளுமன்றத்தில் ஜனநாயகப் பண்புகளைப் பேணி எதிர்க்கட்சிகளுக்கு உரிய கௌரவம் கொடுக்கப் போகும் அரசு, பாராளுமன்றத்தின் கௌரவத்தைக் காக்கப்போகும் அரசு என்றெல்லாம் பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய அனுர அரசு, ஆட்சிக்கு வரும் அத்தனை அரசுகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். எதிர்க்கட்சிகளை அடக்கியாளுதலே அவர்களின் தாரக மந்திரம் என்பதனை சில நாள் பாராளுமன்ற அமர்வுகளிலேயே வெளிப்படுத்தி விட்டது.

கலாநிதிகள், கல்விமான்களே அனுர அரசின் பலமாக கணிப்பிடப்பட்ட நிலையில், அதுவே, அனுர அரசின் முதல் பலவீனமாகி விட்டது. பொய் கலாநிதிப் பட்டங்கள், பொய் சான்றிதழ்கள், தவறான தகவல்கள் என வெளிக் கிளம்பிய குற்றச்சாட்டுக்களினால் ஆட்டம் கண்ட அனுர அரசு, தனது சபாநாயகரையே பதவியிலிருந்து விலக வைக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது. அத்துடன், போலி கலாநிதிகளையும் கல்விப் பட்டங்களையும் கொண்ட பித்தலாட்ட அரசு என்ற அவப் பெயரையும் சுமக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இவ்வாறு தனது பக்கம் பொய் கலாநிதிப் பட்டங்கள். பொய் சான்றிதழ்கள், தவறான தகவல்கள் கொண்ட எம்.பிக்களை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி பக்கத்திலுள்ள எம்.பிக்களின் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுஜன பெரமுன எம்.பி. நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் கல்வித் தகைமைகள் தொடர்பில் அனுர அரசின் அமைச்சர்களும் எம்.பிக்களும் தெரிவிக்கும் கருத்துக்களும் விடுக்கும் சவால்களும் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளும் மேலே பார்த்து எச்சில் துப்புவதற்கு ஒப்பானதாகவேயுள்ளது. அதாவது, ஒரு விரல் நீட்டி எதிர்க்கட்சி எம்.பிக்களின் கல்வித் தகுதிகளை கேள்விக்குட்படுத்தும் அனுர அரசின் அமைச்சர்கள், எம்.பிக்கள் தமது ஏனைய 4 விரல்களும் தம்மை நோக்கியே திரும்பியிருப்பதை உணராதவர்களாகவே சபையில் செயற்படுகின்றனர்.

இதில் தனது கல்வித் தகுதி தொடர்பான அனுர அரசின் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிரூபித்து விட்டார். நாமல் ராஜபக்ஷ தன் மீதான குற்றச்சாட்டுக்களை அனுர அரசு நிரூபித்தால் அரசியலிலிருந்து ஒதுங்குவேன் என சவால் விடுத்துள்ளார். இதுவரையில் நாமல் ராஜபக்ஷ மீதான குற்றச்சாட்டை அனுர அரசு தரப்பால் நிரூபிக்க முடியவில்லை. தமது சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் உண்மையானது என்பதனையே நிரூபிக்க முடியாது, அவரை பதவி விலக வைத்த அனுர அரசால் எப்படி ஏனையவர்களின் கல்வித் தகுதி தொடர்பில் நிரூபிக்க முடியும்? இது ஒருபுறமிருக்க பாராளுமன்றத்தில் எதிர்கட்சிகளை அடக்கி ஒடுக்கும், எதிர்க்கட்சிகளின் உரிமைகளைப் பறிக்கும், எதிர்க்கட்சிகள் மீது சேறடிக்கும், சபாபீடத்திற்கு தலைமை தாங்குபவரை கட்டுப்படுத்தும். குறுக்கீடுகளை செய்து குழப்பங்களை ஏற்படுத்தும் வேலைகளை சபை முதல்வரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சருமான பிமல் ரத்னாயக்க, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க ஆகியோர் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். அனுர அரசின் கன்னி பாராளுமன்ற அமர்விலேயே எதிர்க்கட்சிகளின் உரிமைகளைப் பறிக்கும், சேறடிக்கும் வேலைகளை இவர்கள் இருவரும் தொடங்கி விட்டனர். எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஏதாவது ஒரு விடயத்தை முன்வைக்கும்போதே முந்திரிக் கொட்டைபோல் முந்திக் கொண்டு எழும்பி எதிர்க்கட்சி எம்.பிக்கள் தாம் கூற வந்த விடயத்தை முழுமையாகக் கூற விடாது தடுத்தல். நேரம் கொடுக்க வேண்டுமெனச் சபைக்கு தலைமை தாங்குவரை, சபாநாயகரைக் கூட வற்புறுத்தல், அரசு மீது எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தால் இனவாதம் பேசுவதாக, இனவாதியாக் செயற்படுவதாகக் குற்றம்சாட்டுதல் என இவர்கள் இருவரும் செய்யும் அலப்பறைகள் அளவுக்கதிகம்.

அதிலும் சபைமுதல்வர் என்ற கோதாவில் அமைச்சர் பிமல் ரத்னாயக்க இவ்வாறு செயற்படுகின்றார் என்றால் அமைச்சர் வசந்த சமரசிங்க எதிர்க்கட்சி எம்.பி. யார் பேசினாலும், அனைத்தும் தெரிந்தவர் போல் எழுந்து நின்று குறுக்கீடுகளைச் செய்வதும் தர்க்கம் செய்வதும் பதிலளிக்கின்றேன் என போர்வையில் சேற்றை வாரியடிப்பதும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும் அரச தரப்பு பிரதம கொறடாவான சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ செய்யவேண்டிய வேலைகளை வலுக்கட்டாயமாகத் தனது தலையில் போட்டுக்கொண்டு அனைத்துக்கும் எழுந்து நிற்பதுமென கடந்த அரசுகள் செய்த அதே தவறுகளை முன்னெடுத்து வருகின்றார்.

அதுமட்டுமன்றி, தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்தபோது, பாராளுமன்றத்தின் கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவி எதிர்க்கட்சிகளுக்கே வழங்கப்படவேண்டுமெனப் போர்க் கொடி தூக்கி கோப் குழுத் தலைவர் பதவியையும் பெற்றிருந்தது. ஆனால், தற்போது தாம் ஆட்சிக்கு வந்தவுடன் கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவி தம்மிடமே இருக்க வேண்டுமெனக்கூறி எதிர்க்கட்சிக்கு 'கோப்' குழுத் தலைவர் பதவியை மட்டும் கொடுத்துக் கடந்த அரசுகளின் வழியிலேயே தனது பயணத்தைத் தொடர்கின்றது.

கடந்த அரசுகளின் ஆட்சியில் எதிர்க்கட்சி பக்கமிருந்த தேசிய மக்கள் சக்தியினர் அரசும் சபாநாயகரும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் உரிமைகளைப் பறிப்பதாகவும் குரல்வளையை நசுக்குவதாகவும் பெரும்பான்மைப் பலத்தை வைத்திருப்பதால் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை, கோரிக்கைகளை, மதிப்பதில்லை எனவும் நாட்டில் மட்டுமல்ல, பாராளுமன்றத்திற்குள்ளும் காட்டாட்சியே நடப்பதாகவும் ஒப்பாரி வைத்தார்கள்.

ஆனால், இன்று எதிர் கட்சியினருக்குப் பதிலடி கொடுக்கின்றோம், அவர்களை நாறடிக்கின்றோம், எமது கட்சிக்காக, அரசுக்காக வாதிடுகின்றோம் என்ற நினைப்பில் இவர்கள் செய்யும் கடந்த கால அரசின் இவ்வாறான வேலைகளினால், அனுர அரசுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் தான் இழுக்கை, அவப் பெயரை ஏற்படுத்தி மக்கள் விரும்பிய மாற்றத்திற்குப் பதிலாக ஏமாற்றத்தையே கொடுக்கின்றார்கள், புதிய திசைக்குப் பதிலாகப் பழைய திசையையே காட்டுகின்றார்கள். இப்படியே பயணித்தால் அனுர அரசும் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள்ளேயே வீசப்படும்.



## வாழ்வியல் தரிசனம்

மிகப் பெரிய திறமைசாலிகள் கூட, தங்களை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். ஆனால், அநேகர் எந்தவொரு விடயத்திலும் தனித்துவம், தகுதி இல்லாமலே போலி விளம்பங்களால் மேடை ஏறுவதுமுண்டு.

சபையில் முதல் வரிசையில் இடம்பிடிக்க பெரும் பிரயத்தனப்படுவார்கள். அது கிடைக்காது விட்டால் சிச் சீ இந்தக் கூட்ட ஒழுங்குமுறை தவறு என சொல்லி வெளியே மெதுவாக நழுவிச் செல்வார்கள்.

போலி கௌரவம் தேடுபவர்களைச் சுற்றி இருப்பவர்கள் தெரிந்து கொள்வார்கள். இந்த உண்மை தெரிந்தும் கூட விடாப்பிடியாக தங்களைக் காட்டிக்கொடுக்க முனைபவர்களை என்ன என்பது?


சிறப்பான செயல்களை எவர் செய்தாலும் அவர்களை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள்.

உலக ஹேமத்திற்காக ஒரு பங்காளனாக வலிந்து சேவை செய்பவர் தங்களை மேம்படுத்தி, புகழ் தேடவிரும்பமாட்டார்கள். உலகம் பெரிது ஒவ்வொரு பிரஜையும் வேண்டப்பட்டவர்கள்! உலகப் பார்வை தீர்சண்யமானது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை பாருங்கள்



அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக உக்குவளை-மாருகொன மையவாடி வீதியும் குடியிருப்புகளுக்குச் செல்லும் வீதியும் பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இந்த வீதிகளின் நிலைமை பற்றி உக்குவளை செயலகம், பிரதேச சபைகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவதானித்துச் சென்றுள்ளனர்.

மாதங்கள் உருண்டோடிய பின்னரும், இந்த வீதிகள் இன்னும் புனரமைக்கப்படவில்லை. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே இந்த வீதியின் ஊடாக வாகனங்களில் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கடும் மழை பெய்தால், நடந்து க்கூட செல்லமுடியாது என்றும் பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிராம அபிவிருத்திக்கென பிரதேச செயலகங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இந்நிலையில் அந்தநிதியிலிருந்து, இந்த வீதியைப் புனரமைத்து தருமாறு, பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ஏ.எம்.ஜலீல்

# நத்தார் பண்டிகை

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் டிசெம்பர் 25 அன்று நத்தார் பண்டிகையை வெகு விமர்சையாக கொண்டாடியுள்ளனர். அந்த வகையில், இலங்கை வாழ் கிறிஸ்தவர்களும் நத்தார் பண்டிகையை வெகு விமர்சையாக கொண்டாடியுள்ளதை படங்களில் காணலாம்.

– தமிழ்மிரர் நிருபர்கள்



அம்பாறையில்...



பதுளையில்...



ஹட்டனில்...




கொச்சிக்கடையில்...



கல்முனையில்...



நாவலப்பிட்டியில்...



மன்னாரில்...



குருக்கள்மடத்தில்...



தோற்றாத்தீவில்...



# திருப்தி தராத திருப்பம்



ஏ.எச்.ஏ.ஹுஸைன்

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் டிசெம்பர் 26ஆம் திகதி என்பது நாட்டின் கரையோரத்தில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களைக் கதறியழ வைத்து கிலிகொள்ளச் செய்த ஒரு நாளாகும்.

'சுனாமி' ... இது கரையோர மக்களைக் கதிகலக்கி, கண்ணீர் மல்க வைத்த ஒரு சொல். 'சுனாமி' என்று அழைக்கப்படும் இந்த ஜப்பானியச் சொல்லின் 'பேரலை' எனும் அர்த்தம் இப்போது இலங்கையர்களுக்கு, அதிலும் குறிப்பாகக் கரையோரப் பகுதி மக்களுக்கு நன்கு பரிச்சயமான ஒன்றாகிவிட்டிருக்கிறது.

கடந்த 2004 டிசெம்பரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் பொருளாதார ஆழிகளும் அந்தப் பாதிப்புக்களிலிருந்து இன்றுவரை முழுமையாக மீளமுடியாமலே ஒரு சில குடும்பங்கள் காலங்கழிக்கின்றன.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இந்தோனேசியாவில் ஏற்பட்ட 8.9 றிச்டர் அளவிலான பூகம்பத்தினால் இந்தோனேசியாவின் ஆச்சேயில் மாத்திரம் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் பேரும் இலங்கை இந்தியா உட்பட 11 பிற அண்டை நாடுகளில் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேரும் வெறும் மூன்றே நிமிட நேரச் சுனாமிப் பேரலையால் காவு கொள்ளப்பட்டிருந்தார்கள்.

அன்றைய தினம் காலை 8.20 மணியளவில், கடலை விட்டுக் கண்ணிமைக்கும் நேரத்தில், அதிவேகமாக ஆர்ப்பரித்து மேலெழுந்த பேரலைகள் ஒரு சில நிமிடங்களில் கரையைக் கடந்து ஊருக்குள் ஊடுருவியிருந்தது.

இதனால், உழைப்பிடங்களாகவும் உறைவிடங்களாகவும் உல்லாசபுரிகளாகவும் ஓய்விடங்களாகவும் எழில் கொஞ்சும் தங்கக் கடற்கரைகளாகவும் திகழ்ந்த இடங்களெல்லாம் ஒரு சில நிமிட நேரத்தில் நிசப்த மயானங்களாக மாறிவிட்டிருந்தன.



சுமார் ஐந்து நிமிட நேரத்திற்கும் குறைவான சுனாமித் தாக்கம் நம் நாட்டில் அரை இலட்சத்துக்கும் சற்றுக் குறைவானோரின் வாழ்வை அழித்து விட்டுப் போனது.

அநேகரை அநாதைகளாகவும் ஆயிரமாயிரம் பேரை தங்களது இருப்பிடங்களிலிருந்து வெருண்டோடச் செய்து அகதிகளாகவும் ஆக்கி விட்டிருந்தது.

எப்படியோ இன்றோடு 20 வருடங்கள் கழிந்து விட்ட தற்போதைய நிலையில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவுத் தாக்கங்களிலிருந்தும், மனப்பாதிப்புகளிலிருந்தும் மக்கள் மீட்சி பெற முடிந்திருக்கிறது என்று பொதுவாகத் திருப்திப்பட்டாலும், சிலருக்கு இன்னமும் சுனாமி விட்டுச் சென்ற மாறாத தடங்கள் ஆறாத வடுக்களாகவே உள்ளன.

சுனாமி இன, மத, பேதம் பார்த்துத் தாக்கவில்லை. வற்றாத அருட்;கடலை தமது வாழ்வாதாரத்திற்காக நம்பிக் கரையில் வாழ்ந்த அனைத்து இன மீனவர் சமுதாயத்தையும் சுனாமி அழித்து விட்டுப் போனது.

கடல் அலை என்பது தாலாட்டு இசை என்றே நம்மில் பெரும்பாலானோர் நினைத்தும் அதை அனுபவித்தும் மகிழ்ந்துமிருந்தனர்.

ஆனால், உலகின் ஒரு பகுதியை உலுக்கி அசைத்துப் பார்க்கும் துன்பியல் ஒலியாக பூகம்பமும் அதனால் உண்டான பேரலைகளும் மாறாமல் வரலாற்று மனத்திரையில் பதிந்து விட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும், வாழ்வதற்குத் தோதாகவுள்ள இந்த ஒரேயொரு பூமிப்பந்தில் இயற்கையின் நியதிகளுக்கும் இணங்கித்தான் வாழ வேண்டும் என்ற யதார்த்தத்தையும் உணர வேண்டிய தேவைப்பாடும் உள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரைப்போல, சுனாமியால் பாதிக்கப்பட்டோரும் 20 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நமது நாட்டின் 'ஒரு நாடு பல நீதி' என்ற வெறுப்புக் கலந்த கொள்கைகளையிட்டு மனம் வருந்த வேண்டியுள்ளது.

முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் 2005இல் சவூதி அரேபிய இளவரசர் நைப் அவர்களின் அழைப்பின் பேரில் உம்றா எனும் மார்க்கக் கடமைக்காக சவூதி அரேபியா சென்றிருந்தார்.

அப்போது இலங்கையில், சுனாமியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான அம்பாறை கரையோர சமுதாய மக்களுக்கு உதவுமாறு அவர் சவூதி இளவரசரைக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு இணங்கிய இளவரசர் இந்தோனேசியாவுக்கு எனத் தயாரிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை இலங்கைக்கு வழங்கும்படி உத்தரவிட்டார்.

அதற்கமைவாக சவூதி அரசாங்கத்தினால் அக்கரைப்பற்று நுரைச்சோலையில் 50 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரச காணியில் 500 வீடுகளுக்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதில், சவூதி அரசினால் அப்போதைய மதிப்பீட்டின்படி சுமார் 1,000 கோடி ரூபாய்கள் செலவில் 500 வீடுகளை உள்ளடக்கி சர்வதேசத் தரத்திலான வைத்தியசாலை, ஆண்கள் பெண்களுக்கான தனித் தனியான பாடசாலைகள், முன் பள்ளிப் பாடசாலை, நூலகம், சந்தைத் தொகுதி, சனசமூக நிலையம் விளையாட்டு மைதானம், பொழுது போக்குப் பூங்கா பள்ளிவாசல், பேருந்து நிலையம் என்பன முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரபின் முயற்சியினால் கட்டி முடிக்கப்பட்டன.



சகல உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டத்தை சவூதி அரேபியா அரசாங்கம் 2009ஆம் அண்டளவில் பூர்த்தி செய்து அதன் மாதிரிச் சாவிக் கொத்தை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தது. இலங்கைக்கான சவூதி அரேபியாவின் முன்னாள் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ், வீட்டுத் திட்டத்தை உத்தியோகப்பூர்வமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தார்.

ஆனால், பின்னர்தான் இனவாத சுனாமி ஆவேசம் கொண்டெழுந்து ஆர்ப்பரிக்கத் தொடங்கியது. பேரின மதவாதிகள் கொதித்தெழுந்தார்கள்.

பேரின மதவாத அமைப்பான சிஹல உறுமய இந்த நவீன வீடமைப்புத் திட்டத்தினை எதிர்த்து, தீகவாபி காணியில் முஸ்லிம்களைக் குடியேற்றுவதாகக் குற்றச்சாட்டி, அங்கு கட்டப்பட்ட வீடுகளும் ஏனைய கட்டுமானங்களும் அவை முஸ்லிம்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று கருதி நீதிமன்றம் சென்று வழக்கு தாக்கல் செய்தது.

இந்த வழக்கின் பிரகாரம் நுரைச்சோலை வீடுகளைத் தனி இனமொன்றுக்கு வழங்கக்கூடாது என்றும் அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கி இவ்வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாவினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பு வழங்கப்பட்டு 15 வருடங்கள் கடந்தும் இவ்வீடுகள் இன்று வரை பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுவது கவலைக்குரியதாகும்.

அதன் காரணமாகக் கடந்த 20 வருடங்களாக இந்த விடயம் இழுபறியில் உள்ளது. கட்டிட நிர்மாணங்கள் கவனிப்பாரின்றி காடு மண்டி சிதைந்து சிதிலமடைந்து வருகின்றன. இதன் காரணமாக அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் இல்லாமல் போனது. அவர்கள் கடந்த 20 வருடங்களாக அகதிகளாகவே அலைந்து திரிகிறார்கள்.

நாட்டின் மற்றெல்லாப் பாகங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியானவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கும் நிலையில், அக்கரைப்பற்று மக்களுக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்பட்டு அவர்கள் அனாதரவாக விடப்பட்டுள்ளார்கள். இப்படியாக கசப்பும் கவலையும் நிறைந்ததாக கடற்பேரலைத் தாக்கத்திற்குள்ளான கரையோர சமுதாய மக்களின் வாழ்வு கரைந்து கொண்டிருக்கின்றது.

நாட்டின் அரசியல் பேரின மதவாத இழிநிலைக்கு இது தக்கதோர் சான்றாக இன்றளவும் இருந்து வருகின்றது.

திருப்தி தராத திருப்பம்

அக்கரைப்பற்று, நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளையும், புனரமைத்து பயனாளிகளிடம் கையளிக்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தீர்மானித்துள்ளார் என்று சமீப சில நாட்களாக செய்திகள் அடிபடத் துவங்கின.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலிட் ஹமூத் அல் கத்தானி அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடிய போது, இவ்வீடுகளை விரைவில் மக்களிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் இதனைப் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதே சவூதி அரேபியாவின் எதிர்பார்ப்பென்றும் செய்திகள் வெளிவந்து நிம்மதியைத் தந்தன.





# தற்காத்துக் கொள்வதே சிறந்த வழி

சுனாமி ஏற்பட்டு 20 வருடங்கள் கடந்திருக்கின்றது. ஆனால், அதன் வடுக்களிலிருந்து இன்னும் இலங்கையின் சில பகுதிகள் மீளாத நிலையில் உள்ளது. இவ்வாறான ஒரு இயற்கையின் சீற்றம் ஏற்படும்போது மக்களே விழிப்பாகவும் சிறப்பாகவும் தங்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை சுனாமி பேரழிவு எமக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

சுமத்ரா தீவுப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.9 ரிக்டர் அளவு பதிவாகியுள்ளது. கடற்பரப்பில் ஏற்பட்ட இதேவேகமுள்ள நிலநடுக்கம் தரைப் பகுதியில் ஏற்பட்டிருந்தால் ஆசியாசின் பல நாடுகள் தரை மட்டமாகியிருக்கும். இதன் பாதிப்பு பல ஆயிரம் அணுகுண்டுகள் வெடித்ததற்குச் சமமாக இருக்கும் என்று புவியமைப்பியல் வல்லுநர்கள் அப்போது தெரிவித்திருந்தனர்.



சுனாமி போன்ற தாக்கங்களை நாம் எதிர்கொண்ட போது, உலகத்தின் மீதுள்ள பற்று காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக ஆயுள் முழுவதையும் செலவு செய்து சேகரித்துக் கொண்ட பொருட்கள் சில நொடிகளில் அழிந்து போனது. அதேபோன்று, மரணத்திலிருந்தும் எம்மால் தப்ப முடியாது போனது என்பது எமக்கு முன்னுள்ள படிப்பினையாகும்.

உலகில் சுனாமி, பூகம்பம், புயல், மழை வெள்ளம், எரிமலை வெடிப்புக்கள் என பல நடந்து கொண்டேயிருக்கின்றது. இவை, மனித இனத்தைப் பெரிதும் பாதித்தாலும் மிருக இனங்கள் பெரிதும் தப்பிக்கொள்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றது. இவை அனைத்தும் மனிதனை தூய்மைப்படுத்தவும், சிந்திக்கவும் வைத்தது.

அனர்த்தங்கள் சம்பவிக்கும் வேளைகளில் அவற்றிற்கு ஆயத்தமாகும் முகமாக அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அறிவூட்டல், அனர்த்த அறிவிப்பு ஒலியெழுப்பல், சகல மட்டங்களிலும் விருத்தியாக்கப்பட்டிருக்கின்றது.



இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை ஆகியவற்றிலும் இந்த விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவம் பல்வேறு செயற்பாட்டாளர்களைக் கருத்தில் கொண்டு கட்டளை இடுதல் கட்டுப்படுத்தப்படுத்தல்களை விட ஒருங்கிணைப்பை வலியுறுத்தும் விதத்தில் நிறுவக மாதிரிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், கட்டளை இடுதலும், கட்டுப்படுப்படுத்தலும் ஒவ்வோர் அரச நிறுவன அதிகாரிகளுக்கிடையிலேயே பொருந்தக்கூடும். ஒப்படைக்கப்பட்ட பணி, பொறுப்புக்கள் மற்றும் ஆற்றல் வாய்ந்த முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புமே முக்கிய அம்சங்களாகும்.

அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒட்டுமொத்த அதிகாரத்தைக் கொண்டு இருக்கையில், மாகாண அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு, மாகாண, மாவட்ட, உள்ளூராட்சி, பிரதேச, கிராம சேவையாளர் மட்டங்களில் பதிலிறுப்பு, மீளுமை பிரயத்தனங்கள், முகாமைத்துவம், அவசர தகவல்களைப் பரப்பல் போன்றவற்றிற்கான ஒருங்கிணைப்புப் பிரிவாகச் செயற்படுகிறது. இது நிர்வாக கட்டமைப்பு விடயங்களாகும்.

கி.மு. 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை 'பிலோப்போனேசியப் போர் வரலாறு' என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் எந்த இடத்தில் நில நடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் பின்வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 365இல் அலெக்சாந்திரியாவில் மிகப் பெரிய அழிவுக்குப்பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது, நில நடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு, அதைத் தொடர்ந்து, இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில் கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது.

கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்குகின்றது. மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுதான் இருந்தது. அதன் மீது தான் பூமி இருந்தது. ஆனால், கண்டங்களாகப் பிரியப் பிரிய அதன் தட்டு வெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு நிலத்தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீதுதான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத் தான் 'டெக்டானிக் பிளேட்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆராய்ச்சியாளர்கள் கூற்றுப்படி, கி.மு. 365ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி கிழக்கு மத்திய தரைக்கடலில் இவ்வாறு தோன்றி, எகிப்தில் அலெக்சாண்டிரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடல் படுகையில் திடீரென ஏற்படும் மாற்றத்தால் மேலிருக்கும் தண்ணீர் செங்குத்தாக இடமாற்றம் அடைவதால் சுனாமி உருவாகும். டெக்டானிக் நிலநடுக்கங்கள், பூமியின் புவி ஓடு உருக்குலைவதால் உண்டாகும். இது கடலுக்கு அடியில் ஏற்படும் போது சிதைக்கப்பட்ட பகுதியிலுள்ள தண்ணீர், சமநிலையில் இருந்து இடம் பெயர்கிறது.

டெக்கான் தட்டுகளின் தவறான சுழற்சி காரணமாக, செங்குத்தாக நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. இயக்கத்தில் ஏற்படும் சாதாரண தவறுகளாலும் கடல் படுகையில் இடப்பெயர்ச்சி ஏற்படும்.ஆனாலும் இவை பெரிய சுனாமியை உண்டாக்குவது இல்லை. சுனாமிகள் ஒரு சிறிய அலை வீச்சும், மிக நீண்ட அலை நீளமும் உடையவை சாதாரண கடல் அலை 30 அல்லது 40 மீட்டர் அலைநீளம் உள்ளவை. ஆனால், சுனாமி அலைகள் சில நூறு கிலோ மீட்டர் நீளம் உடையவை. இவை கடல் பரப்பைவிட 300 மில்லி மீட்டர் மேலே சிறிய வீக்கம் போன்று உருவாகும். அவை தாழ்வான நிலை அடையும் போது, மிக அதிக உயரமாக மேலெழுகிறது. சுனாமியின் சிறிய அலைகூட கடலோரப்பகுதியை மூழ்கடித்து விட முடியும்.

ஏப்ரல் 1946, அலாஸ்காவில் அலேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீட்டர் உயரத்திற்கு அலை மேலே எழுந்து ஹவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தையே அழித்து விட்டது. பசிபிக் பெருங்கடல் தரையில் அலாஸ்கா கீழ் நோக்கித் தள்ளப்பட்டதால், உண்டான பூகம்பமே இதற்குக் காரணம். குறுகும் எல்லைகளில் இருந்தும் ஸ்டாரிக்கா என்ற இடத்தில் 8,000 வருடங்களுக்கு முன் சுனாமி தோன்றியது.கிராண்ட் பேங்க் 1929, பப்புவா நியு கினியா 1998 (டப்பின் 2001) சுனாமிகள் ஏற்படக் காரணம் பூகம்பத்தின் மூலம் உண்டான வண்டல் கடலில் சென்று கலந்ததால் உண்டானது. ஸ்டாரிக்கா வண்டல் தோல்விக்குச் சரியான காரணம் தெரியவில்லை. அதிகப்படியான வண்டல்கள், ஒரு நிலநடுக்கம் அல்லது எரிவாயு ஹைட்ரேட் வெளியானது (மீத்தேன் போன்ற வாயுக்கள்) காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம்.

1960 வால்டிவியா பூகம்பம் (9.5 ஆறு), 1964 அலாஸ்கா பூகம்பம் (9.2 ஆறு), 2004இல் இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் மற்றும் 2011இல் தோஹூ பூகம்பம் (9.0 ஆறு) போன்றவை சமீபத்தில் நிகழ்ந்த சக்தி வாய்ந்த நீள் ஊடுருவு பூகம்பங்கள். ஜப்பானில் சிறிய (4.2 ஆறு) பூகம்பம் ஏற்பட்டு அருகிலுள்ள கரையோரப் பகுதிகளை ஒரு சில நிமிடங்களில் பாழ்படுத்தியது.

1950களில் பெரும் நிலச்சரிவுகள் மூலம் தான் பெரிய சுனாமிகள் உண்டானது என்று நம்பப்பட்டது. நீருக்கடியில் ஏற்படும் நிலச்சரிவுகளால் ஏற்படும் சுனாமியை 'சியோருக்கஸ்' என்று அழைத்தனர். இதனால் அதிக அளவு நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. ஏனெனில், மண்சரிவினால் உண்டாகும் கழிவுகள் அல்லது விரிவாக்கத்தால் உண்டாகும் சக்தி திரும்பவும் நீருக்குள்ளேயே செலுத்தப்படுகிறது. 1958இல் மிகப்பெரிய மண்சரிவு, அலாஸ்காவின் லிடுயா விரிகுடா பகுதியில் ஏற்பட்டபோது 524 மீட்டர் உயரத்திற்கு (1,700 அடிக்குமேல்) அலை ஏற்பட்டது.

சுனாமிகள் இரு வழிகளில் சேதத்தை ஏற்படுத்துகிறது. பெருமளவு சக்தியுள்ள பெரிய அலை (நீரலை) அதிக வேகத்தில் செல்வதாலும், அலைகள் பெரிய அளவு இல்லாவிட்டாலும் நிலப்பகுதியை மொத்தமாக அழித்து, எல்லாப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச் சென்று விடுவதாலும் பெரும் சேதம் ஏற்படுகிறது.

மிகப்பெரிய சுனாமியைத் தவிர நெருங்கிய அலைகளை உடைக்க முடியாது. மாறாக ஒரு வேகமாக நகரும் அலைகளின் துவாரம் போன்று தெரியும். விரிகுடாக்கள் மற்றும் மிகவும் ஆழமான நீர் அருகில் சுனாமிகள் உண்டானால் அவை சுனாமியை ஒரு படிக்கட்டு போன்றும், ஒரு செங்குத்தான அலையாகவும் மாற்றுகிறது. இதன் காரணமாகத் தான் ஜப்பானிய மொழியில் இதனை 'துறைமுக அலை' என்று கூறுவர். சில நேரங்களில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், மீன்பிடிக்கும் போது எந்த அசாதாரண அலையையும் உணராமல், கரைக்குத் திரும்பி வந்த பின் கிராமமே பெரிய கடலலையால் அழிவுற்றதைக் கண்டுள்ளனர். இது நாம் கண்ட சுனாமி பேரலையிலும் நடந்ததை சுட்டிக்காட்ட முடியும். சுனாமியின் உச்ச அலை கரையை அடையும் போது, கடல் மட்டம் தற்காலிகமாக உயரும். இதை 'ரன்' என்று குறிப்பிடப்படுகிறது. இவை கடல் மட்டத்திற்கு மேலிருந்து அளக்கப்படுகிறது. அலை உச்சிகளுக்கு இடையில் பலமடங்கு அலைகள் பலமணி நேரங்கள் தொடர்ந்து வந்தால், அதைப் பெரிய சுனாமி என்கிறோம்.

சுனாமி பேரலை தாக்கி 20 வருடங்கள் கழியும் நிலையில், சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அறிவினை பெற்றுக் கொள்வதே மனிதர்கள் அதிலிருந்து ஓரளவு தம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழி ஒன்றாகும். வெறுமனே நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்தி ஒவ்வொரு வருடமும் இழந்த உயிர்கள், உடமைகளை நினைத்து அழுது புலம்பி கட்டிப் புரள்வதில் எவ்வித பயனும் மக்களுக்கு ஏற்பட்டு விடப்போவதில்லை. (நன்றி: இணையம்)

ஜம்மு காஷ்மீர்

## நீதிமன்ற விசாரணையின்போது பெண் சட்டத்தரணிகள்

# பர்தா அணிய முடியாது



நீதிமன்ற விசாரணையின்போது, பெண் சட்டத்தரணிகள் பர்தா அணியக்கூடாது என்று, ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த நவம்பர் 27ஆம் திகதியன்று, ஸ்ரீநகரில் உள்ள தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்றுள்ளது. இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் பெண் சட்டத்தரணி சையத் அய்னைன் காத்ரி என்பவர் ஆஜராகி வாதாடினார். அப்போது, அவர் முகத்தை மறைத்து பர்தா அணிந்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ராகுல் பார்தி, பர்தாவை அகற்றுமாறு குறித்த பெண் சட்டத்தரணியை அறிவுறுத்தினார். நீதிபதியின் அறிவுரையைக் குறித்த பெண் சட்டத்தரணி ஏற்கவில்லை. மேலும், பர்தா அணிவது எனது அடிப்படை உரிமை. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று, அவர் வாதிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதி ராகுல் பார்தி கூறும்போது, “மனுதாரர்களுக்காக ஆஜராகும் சட்டத்தரணிகள் தங்கள் அடையாளத்தை உறுதி செய்வது அவசியம். முகத்தை மறைத்து வழக்கறிஞர்கள் ஆஜராவது ஏற்புடையது கிடையாது. பெண் சட்டத்தரணிகளின் ஆடைகள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் குறித்து உயர் நீதிமன்ற பதிவாளர் விரிவான விளக்கம் அளிக்க வேண்டும்” என்று உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்ற பதிவாளர், கடந்த 5ஆம் திகதி, பெண் சட்டத்தரணிகளுக்கான ஆடைகள் குறித்த வழிகாட்டுதல்களை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த வழிகாட்டுதல்கள் குறித்து உயர் நீதிமன்ற பெண் நீதிபதி மோக்சா கஜூரியா காஸ்மி, ஆய்வு செய்து, அண்மையில் முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது,

பார் கவுன்சிலின் விதிகளின்படி, பெண் சட்டத்தரணிகள் முழுநீள கருப்பு நிற மேற்சட்டை அல்லது பிளவுஸ், வெள்ளை காலர், வழக்கறிஞர்களுக்கான உடையை அணிய வேண்டும். சேலை, நீளமான ஸ்கர்ட், பஞ்சாபி உடை, சுடிதார்-குர்தா அல்லது சல்வார்-குர்தா அல்லது பாரம்பரிய உடைகளை அணியலாம். கோடை காலங்களில் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்களில் கருப்பு நிற உடை அணிவதிலிருந்து சட்டத்தரணிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது” என்றார்.

புதுடெல்லி

## பாலியல் வன்புணர்வால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு

# இலவச சிகிச்சை அளிக்குமாறு உத்தரவு




பாலியல் வன்புணர்வால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு, தனியார் வைத்தியசாலைகளில், இலவசமாக சிகிச்சை அளிக்க வேண்டும் என்று, புதுடெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுடெல்லி நிகால் விஹார் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவியை, பெற்ற தந்தையே பாலியல் வன்கொடுமை செய்தார். இந்த வழக்கைப் புதுடெல்லி உயர் நீதிமன்ற நீதிபதிகள் பிரதிபா எம் சிங், அமித் சர்மா விசாரித்து அண்மையில் முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளனர்.

அந்த உத்தரவில், “பாலியல் வன்புணர்வு, ஆசிட் வீச்சால் பாதிக்கப்படும் பெண்களுக்கு நாடு முழுவதும் உள்ள அரசு, தனியார் வைத்தியசாலைகளில் இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். மத்திய அரசு, மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் அரசு வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகள் இந்த உத்தரவைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்.

உடலில் ஏற்பட்டிருக்கும் காயங்கள், சிராய்ப்புகள், மர்ம உறுப்புகளில் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும். பால்வினை நோய்கள், எச்.ஐவிக்கான பரிசோதனை செய்து அதற்கும் சிகிச்சை அளிக்க வேண்டும்.

கருத்தடை, கருக்கலைப்பு குறித்து பாதிக்கப்பட்ட மாணவிகள், அவர்களின் பெற்றோருக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். இது தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிகளை அனைத்து அரசு, தனியார் வைத்தியர்கள் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்.

பாலியல் வன்புணர்வால் பாதிக்கப்பட்டு சிகிச்சை வரும் பெண்களிடம் அடையாள அட்டை கேட்டு தொந்தரவு செய்யக்கூடாது. எந்த காரணத்துக்காகவும் அவர்களிடம் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. இது தொடர்பாக அரசு, தனியார் வைத்தியசாலைகள் அறிவிப்பு பலகைகளை வைக்க வேண்டும். இந்த அறிவிப்பு பலகை ஆங்கிலம் மற்றும் அந்தந்த பிராந்திய மொழிகளில் இருக்க வேண்டும்.

பாலியல் வன்புணர்வு தொடர்பான சட்டவிதிகள் குறித்து அனைத்து வைத்தியர்கள், செவிலியர்கள், மருத்துவ ஊழியர்கள், வைத்தியசாலை நிர்வாக ஊழியர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட வைத்தியசாலை நிர்வாகங்கள் தங்கள் ஊழியர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். விதிகளை மீறும் சுகாதார பணியாளர்களுக்கு ஓராண்டு சிறை மற்றும் அபராதம் விதிக்க சட்டத்தில் வழிவகை உள்ளது.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உயர் சிகிச்சை தேவை என்றால் வேறு வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டும். அதற்கு தேவையான அம்பியூலன்ஸ் வசதியை வழங்க வேண்டும். வைத்தியசாலை சார்பில் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பெண்கள் தரப்பில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கலாம். இதன்பேரில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என, நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பிரான்ஸ்

# ஈபிள் டவரில் தீ விபத்து

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள உலக புகழ்பெற்ற ஈபிள் டவரில், செவ்வாய்க்கிழமை (24) தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் கொண்டாடப்படவிருந்த நிலையில், ஈபிள் டவர் பகுதியில் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர். இந்நிலையில், ஈபிள் டவரில் உள்ள லிப்ட்டில், திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

முதல் தளத்துக்கும் 2ஆவது தளத்துக்கும் இடையே உள்ள லிப்ட்டிலேயே, தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, விரைந்து வந்த தீயணைப்பு, மீட்புப்படையினர் தீயை அணைத்துள்ளனர்.

இந்த தீ விபத்து காரணமாக, ஈபிள் டவர் பகுதியில் குவிந்திருந்த 12 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஈபிள் டவர் பகுதியில், சுற்றுலாப் பயணிகள் ஒன்றுகூடுவதற்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.



ஜப்பான்

## ஜப்பானில்

# சிரிப்பு திருவிழா



ஜப்பான் - ஒசாகாவில் 2024ஆம் ஆண்டில் பட்ட வேதனைகள், சோகங்களை மறக்கும் வகையில் ஒருவருக்கொருவர் சிரித்து மகிழும் திருவிழா நடைபெற்றுள்ளது.

ஜப்பானில், லிபரல் டெமாக்ரடிக் கட்சித் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்நாட்டின் பிரதமராக ஷிகெரு இஷிபா (வயது 67) உள்ளார். இந்த நிலையில், உள்ளூர்வாசிகளின் உடல், மன நலனைக் காக்கும் பொருட்டு ஒருநாளுக்கு ஒருமுறையாவது அவர்கள் சிரித்திட வகைசெய்யும் வகையில் புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், ஒவ்வொரு மாதத்தின் எட்டாவது நாள், ‘சிரிப்பின் மூலம் ஆரோக்கியம் மேம்படும் நாள்’ என கொண்டாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 20 நிமிடங்கள் வரை வாய்விட்டு சிரித்து மக்கள் தங்கள் கவலைகளை மறந்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



## இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்துமா பாகிஸ்தான்?

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது செஞ்சூரியனில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதில் முன்னிலையிலுள்ள தென்னாபிரிக்கா, இந்த இரண்டு போட்டிகளிலொன்றை வென்றால் நேரடியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறலாமென்ற நிலையில் இத்தொடர் முக்கியத்துவம் பெறுகிறது.

தென்னாபிரிக்க மண்ணில் பாகிஸ்தானின் பெறுபேறுகள் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லையென்ற நிலையில் நசீம் ஷா, குராம் ஷெஹாட், மிர் ஹம்ஸா, மொஹமட் அப்பாஸ் கூட்டணியானது தென்னாபிரிக்காவை குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி பாபர் அஸாம், ஷண் மசூட், மொஹமட் றிஸ்வான், செளட் ஷகீல் ஆகியோர் போர்மிலுள்ள சைம் அயூப், அப்துல்லாஹ் ஷஃபிக்குடன் ஓட்டங்களைப் பெறுவதிலேயே பாகிஸ்தானின் பெறுபேறுகள் தங்கியுள்ளன.

இப்போட்டிக்கான ஆடுகளமானது வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாகவே காணப்பட்டாலும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தொடரில் டொனி டி ஸொர்ஸி, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், றயான் றிக்கெல்டன் ஆகியோர் சல்மான் அலி அக்ஹாவிடம் வீழ்ந்த நிலையில் அவர்கள் கவனத்துடன் துடுப்பெடுத்தாட வேண்டியுள்ளது.

# ஆர்சனல் செல்லும் முவானி?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலுக்கு தமது முன்களவீரரான ரன்டல் கொலோ முவானியைக் கைச்சாத்திடும் வாய்ப்பை பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் வழங்குமெனத் தெரிகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைனுடன் இன்னும் நான்கு ஆண்டுகள் ஒப்பந்தத்தை 26 வயதான முவானி கொண்டிருக்கின்றபோதும் அவரைப் பெரும்பாலும் அவ்வணி தற்போது பயன்படுத்துவதில்லையென்பது குறிப்பிடத்தக்கது.




## சிம்பாப்வே எதிர் ஆப்கானிஸ்தான்:

# டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கிறது

சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது புலவாயோவில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் தொடங்குகின்றது.

இப்போட்டியிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக ஆப்கானிஸ்தானின் ரஷீட் கான் விலகியுள்ள நிலையில் ஆப்கானிஸ்தானின் குழாமில் அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் அண்மைய காலங்களில் ரஷீட் கானின் பங்களிப்பு குறைவென்ற நிலையில் இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் குறைவாகும்.

ஆப்கானிஸ்தான் சார்பாக கஸன்ஃபார், ஆரம்பத் துடுப்பாட்டவீரர் செடிகுலாஹ் அடல் ஆகியோர் அறிமுகத்தை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்பாப்வேயைப் பொறுத்த வரையில் அவ்வணியானது வழமைபோன்று அணித்தலைவர் கிறேய்க் எர்வின், ஷோன் வில்லியம்ஸ், சிகண்டர் ராஸா போன்ற சிரேஷ்ட வீரர்களிலும் பிளஸிங் முஸர்பனி, றிச்சர்ட் நகரவாவிடம் வேகப்பந்துவீச்சிலும் தங்கியுள்ளது.




## சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய ஓமர்ஸாய்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு ஆப்கானிஸ்தானின் அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் முன்னேறியுள்ளார்.

சிம்பாப்வேக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளிலும் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே எட்டாமிடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை ஓமர்ஸாய் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.மொஹமட் நபி, 2.சிகண்டர் ராசா,
3.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்,
4.மெஹிடி ஹஸன் மிராஸ், 5. ரஷீட் கான்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளிலும் 178 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் ஹென்றிச் கிளாசென், 13ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1. பாபர் அஸாம், 2.றோஹித் ஷர்மா, 3.ஷுப்மன் கில்,
4. விராட் கோலி, 5. ஹென்றிச் கிளாசென்,
6.ஹரி டெக்டர், 7.டரைல் மிற்செல்,
8.ஷே ஹோப், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்,
10.பதும் நிஸங்க.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை,
1.ரஷீட் கான், 2.குல்தீப் யாதவ், 3.ஷகீன் ஷா அஃப்ரிடி,
4.கேஷவ் மஹராஜ், பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்,
6.மகேஷ் தீக்‌ஷன, 7.ஜஸ்பிரிட் பும்ரா,
8.மொஹமட் சிராஜ், 9.அடம் ஸாம்பா,
10.ஜொஷ் ஹேசில்வூட்.



இந்நிலையில், இந்தியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 169 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

குறித்த போட்டியில் 105 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித், 11ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.ஜோ றூட், 2.ஹரி ப்றூக், 3.கேன் வில்லியம்சன்,
4.ட்ரெவிஸ் ஹெட், 5.யஷஸ்வி ஜைஸ்வால்,
6.கமிந்து மென்டிஸ், 7.தெம்பா பவுமா,
8.டரைல் மிற்செல், 9.செளட் ஷகீல், 10.ஸ்டீவன் ஸ்மித்.

மேற்படி, டெஸ்டில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் நேதன் லையன், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை,
1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா,
3.ஜொஷ் ஹேசில்வூட், 4.பற் கமின்ஸ், 5.இரவிச்சந்திரன் அஷ்வின், 6.மற் ஹென்றி, 7.நேதன் லையன்,
8.பிரபாத் ஜெயசூரிய, 9. நொமன் அலி, 10.இரவீந்திர ஜடேஜா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ்,
3.இரவிச்சந்திரன் அஷ்வின், 4.ஷகிப் அல் ஹஸன்,
5. மார்கோ ஜன்சன்.

இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இறுதி இரண்டு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலும் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் மஹெடி ஹஸன், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 23ஆம் இடத்திலிருந்து 13 இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.அகீல் ஹொஸைன், 2.அடில் ரஷீட்,
3.வனிது ஹசரங்க, 4.அடம் ஸாம்பா. 5.மகேஷ் தீக்‌ஷன,
6.ரவி பிஷ்னோய், 7.ரஷீட் கான், 8.அர்ஷ்டீப் சிங்,
9.குடகேஷ் மோட்டி, 10.மஹெடி ஹஸன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.ட்ரெவிஸ் ஹெட், 2.பில் ஸோல்ட், 3. திலக் வர்மா,
4.சூரியகுமார் யாதவ், 5.ஜொஸ் பட்லர், 6.பாபர் அஸாம், 7.யஷஸ்வி ஜைஸ்வால், 8.மொஹமட் றிஸ்வான்,
9.றீஸா ஹென்ட்றிக்ஸ், 10.பதும் நிஸங்க.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங் ஐரீ,
3.லியம் லிவிங்ஸ்டோன், 4.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்,
5.வனிது ஹசரங்க.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 26 டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.